“பதிலுரையிலும் 100க்கு 100”

நிதியமைச்சர் தங்கம் தென்னரசுவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, மார்ச். 23-

கல்லூரி மாணவர்கள் விரும்பி பயன்படுத்திடும் வகையில் தரமான மடிக்கணினி / கைக்கணினி வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசின் 2025-26 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான பதிலுரையில், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அளித்த விளக்கத்தைப் பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

2000 கோடி ரூபாயில் அனைத்து மாணவர்களுக்கும் தரமான Laptop வழங்கிட முடியுமா எனக் கேட்ட உறுப்பினருக்குத் தக்க விளக்கத்தை வழங்கியிருக்கிறார் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள்.

கலைஞர் வழங்கி இன்றும் ஓடிக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் சொல்லும்: கழக அரசின் தரம் பற்றி!

யாருக்கும் ஓரவஞ்சனை காட்டாத, எந்தத் துறையையும் விட்டுவிடாத ‘ஆல்ரவுண்ட்’ தமிழ்நாடு பட்ஜெட் 2025 அளித்து, பதிலுரையிலும் நூற்றுக்கு நூறு வாங்கியிருக்கும் நிதியமைச்சருக்குப் பாராட்டுகள்!

இவ்வாறு அப்பதிவில், மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுகம் காஜா தலைமையில் டாக்டர் சுபேர்கான் முன்னிலையில்

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் ரமலான் நோன்பு திறப்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை! கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 23-

கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு நடத்தும் இஃப்தார் புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நாளை (24.3.2025 - திங்கள்) மாலை 4 மணிக்கு திருவான்மியூர் இராமச்சந்திரா கன்வென்சன் ஹாலில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு தலைமை நிலையச் செயலாளர் தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா தலைமை தாங்குகிறார். சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் முன்னிலை வகிக்கிறார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் முகைதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர், எம்.எச்.ஜவாஹிருல்லா, முன்னாள் காங்கிரஸ் எம்.பி. சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ் மாநில தேசிய லீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப், இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷா நவாஸ் ,

தமிழ்நாடு அரசு துணை முதன்மை காஜி முகமது அக்பர் அலி ஷா ஆமிரி, தமிழ்நாடு அரசு தலைமை காஜி (ஷியா) மௌலானா குலாம் முஹம்மது மெஹ்திகான், தலைமை இமாம் மந்தைவெளி ஈக்தா பள்ளி வாசல் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜி சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பேராசிரியர் டாக்டர் முஹம்மது ரேலா, கே.நபாஸ்கனி எம்.பி., ஜோ அருண் (தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையம்) கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமைக் கழக செய்தி தொடர்புத் தலைவர்

டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தயாநிதிமாறன் எம்.பி., தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு,

மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, துணை மேயர் மு.மகேஷ் குமார், பகுதிச் செயலாளர் துரைகபிலன், துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின், அசன் மவுலானா எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் துரை. கபிலன்

வட்டச் செயலாளர் ராஜாரமணன் மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

தலைமை நடராஜன் – துர்கா தேவி நடராஜன் எம்.சி.! என்.சந்திரன் எம்.சி. முன்னிலை!

ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வட்டம் சார்பில் மாபெரும் கோலப் போட்டி!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிசு வழங்குகிறார்! டி.ஆர். பாலு எம்.பி. – ஆர்.எஸ். பாரதி பங்கேற்பு!

சென்னை, மார்ச்.23

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வட்ட திமுக சார்பில் மாபெரும் கோலப் போட்டி, மூத்த குடிமக்கள் மற்றும் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டி 167 வட்டச் செயலாளர் ஜெ.நடரா ஜன், துர்கா தேவி நடராஜன் எம்.சி. ஆகியோர் தலைமையில் 16.3.2025 அன்று நடைபெற்ற இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இன்று (23.3.2025 ஞாயிற்றுக்கிழமை) 4 மணிக்கு TNGO காலனி, மெயின் ரோடு, நங்கநல்லூரில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிசு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு தெற்கு பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் என். சந்திரன் முன்னிலை வைக்கிறார்.

கழகப் பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப. குணாளன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே. இப்ராஹிம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா. பாஸ்கரன், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் கே.ஆர். ஆனந்தன் மற்றும் ஆலந்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி இளைஞரணி நிர்வாகிகள், மாணவரணி நிர்வாகிகள், வட்ட பகுதி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் பாக முகவர்கள் பாக உறுப்பினர்கள் வட்ட அணிகளின் நிர்வாகிகள் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் பா. சீனிவாசன் நன்றி கூறுகிறார்.

குன்றத்தூர் தொடக்கப்பள்ளி ஆண்டு விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பள்ளி மாணவர்களுக்கு பரிசு சான்றிதழ்களை வழங்கி, பள்ளியில் உள்ள நூலகத்தை திறந்து வைத்தார். உடன் குன்றத்தூர் நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி, பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

தி.மு.க. இளைஞர் அணி

சென்னை கிழக்கு மற்றும் மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் நியமனம் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் டி.லோகேஷ் மற்றும் மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.அழகுபாண்டி ஆகியோர் அந்தப் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டு,

சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளராக **வழக்கறிஞர் ‘வானவில்’ விஜய்,** 19/20, ஏ–பிளாக், லேண்ட் மார்வல் பிளாட்ஸ், சந்நிதி தெரு, வில்லிவாக்கம், சென்னை–49,

மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளராக **எம்.இளங்கோ,** சி.வி.எஸ்.அவென்யூ, ஒத்தப்பட்டி, கருப்பாயூரணி, மதுரை–20 ஆகியோர் அப்பொறுப்புகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை,
சென்னை-18
நாள் : 22-03-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வினாடி - வினா போட்டி!

சன் தொலைக்காட்சி தலைமை ஆசிரியர் மு.குணசேகரன் துவக்கி வைத்தார்!

சென்னை, மார்ச்.23-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (22.3.2025) கொளத்தூர், பெரியார் நகர் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் “தளபதி 72 அறிவுகளம், திராவிடம் பேசுவோம்” எனும் மாபெரும் வினாடி வினா முதல் நாள் (அரை இறுதி) போட்டியை சன் தொலைக்காட்சி தலைமை ஆசிரியர் மு.குணசேகரன் துவக்கி வைத்தார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு நொடிக்கு நொடி வளர்ச்சி நூதனமானது முதல்வர் புரட்சி “மனிதநேயம் 32 தளபதி 72 அறிவுக்களம்” எனும் தலைப்பில் வினாடி வினா அரை இறுதி போட்டி நேற்று (22.3.2025) கொளத்தூர், பெரியார் நகர் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மற்றும் இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வகையில் 18 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் 18 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் திராவிட இயக்க வரலாறு, திராவிட இயக்க அரசியல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, திட்டங்கள், தளபதி அவர்களின் பொது வாழ்க்கை, அவர் மக்களுக்காற்றிய தொண்டு, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்த நலத் திட்டங்கள் ஆகியவற்றை அவர்கள் அறிந்து வைத்திருப்பதையும், மேலும் அவர்கள் அறிந்து கொள்வதற்காகவும் ஒரு வாய்ப்பினை அமைக்கும் வகையில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னெடுப்பில் நடத்தப்பட்ட “தளபதி 72 அறிவுக்களம்” எனும் மாபெரும் வினாடி வினா போட்டியில் 781 அணிகள் பதிவு செய்யப்பட்டு அவர்களை 18 வயதிற்கு உட்பட்டவர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் என இரு பிரிவுகளாக பிரித்து மார்ச் 3 முதல் மார்ச் 12 வரை www.thalapathy72.com என்ற இணைய வழியாக போட்டி நடத்தப்பட்டு 18 வயதிற்கு உட்பட்ட தலா ஒரு அணிக்கு 3 பேர் மீதும் 8 அணிகளும் 18 வயதிற்கு மேற்பட்ட தலா ஒரு அணியில் 3 பேர் வீதம் 8அணிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு 22.3.2025 அன்று அரை இறுதி போட்டி செவ்வென நடைபெற்று இறுதி போட்டிக்கு தலா நான்கு நான்கு அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தளபதி 72 அறிவுக்களம் வினாடி வினா அரையிறுதி போட்டியை சன் நியூஸ் தலைமை ஆசிரியர் மு.குணசேகரன் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றி 18 வயதிற்கு உட்பட்ட மாணவர்களும்மேற்பட்ட மாணவர்களும் திராவிட இயக்க வரலாறை அறிந்து வைத்திருப்பதை கண்டு வியந்து மகிழ்ந்தார். நேற்று (22.3.2025) நடைபெற்ற இப்போட்டியில் பங்கேற்ற மாணவ, மாணவியர்களுக்கும், பார்வையாளராக வந்த கல்லூரி மாணவ, மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் அறுசுவை உணவு ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

இவ்வறிவுக்களம் வினாடி வினா இறுதி போட்டி இன்று (23.3.2025), ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் பெரியார் நகர் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. வினாடி வினா இறுதி போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு இந்திய தேசிய பெண்கள் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் ஆனி இராசா அவர்கள் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நேற்று (22.3.2025) நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார், பகுதி செயலாளர்கள் திரு.ஐசிஎப்.முரளிதரன், நாகராஜன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள், திருமதி.சுதா தீனதயாளன், திருமதி.ராஜேஸ்வரி ஸ்ரீதர் திருமதி.ஜி.வி.நாகவள்ளி, திருமதி.கே.சாரதா, திருமதி. டி.யோக பிரியா, திருமதி. எம்.தாவுத்பீ, திருமதி.பி. அமுதா, டாக்டர்.பு.பூர்ணிமா, திருமதி.சி. ஸ்ரீதணி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (22.3.2025) கொளத்தூர், பெரியார் நகர் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் ”தளபதி 72 அறிவு களம், திராவிடம் பேசுவோம் எனும் மாபெரும் வினாடி வினா முதல் நாள் (அரை இறுதி) போட்டியை சன் தொலைக்காட்சி தலைமை ஆசிரியர் மு.குணசேகரன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சந்துரு, மகேஷ்குமார், பகுதி செயலாளர்கள் ஐசிஎப்.முரளிதரன், நாகராஜன் மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.